வோருக்கு உடல்நலன்; அது இல்லாவிட்டால் பொதுநலனுக்கு வருவாய்' என்ற கருத்து ப்ரொகிபிஷன் இல்லாத நாட்டில் வழங்கும் இயல்புடையத் தொடர். அது ஆங்கிலத்தில் உள்ள தொடரின் நேரடியான மொழிபெயர்ப்புத்தான். மது அருந்துவோர்க்கு உடல் நலம் ஏற்படும் என்பது இதனுடைய நோக்கம். மது அருந்துவோருக்கு உடல் நலம் கிடைக்காது என்பதுதான் மதுவிலக்கை ஏற்றுக் கொண்ட அரசுக்கு முதல் கருத்தாக இருக்க முடியும்.................

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மன்னித்துக் கொள்ள வேண்டும். பட்ஜெட் விவாதத்தின்போது அருள்கூர்ந்து இவை பற்றிப் பேசக் கேட்டுக் கொள்கிறேன். எனது அறிக்கைக்குப் பிறகு தயவுசெய்து இதைப்பற்றிய சர்ச்சையை விட்டுவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER: Under Rule 82 A(I) a statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker, Under Rule 82 A (2), there shall be no discussion on such a statement at the time when it is made. அதனால் இதைப்பற்றி விவாதம் வேண்டாம்.

THIRU A. RAHMAN KHAN: Sir this is not a debate but it is a matter of explanation or clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்; தயவுசெய்து. எனக்கு நீங்கள் சொல்லிக் கொடுத்ததற்காக நன்றி. இரண்டு பேர்களும் விவாதத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். அதைப் புரிந்து கொள்ளுங்கள், அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் இரண்டு பேரும் விவாதம் துவக்கிக் கொள்கிறார்கள்.

அடுத்து, 1977–78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்......

3. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஆ) உரிமைப் பிரச்சினைகள் சிலவற்றை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு துரை முருகன் : தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்து 2 நாளாகிவிட்டது, அது இந்த அவைக்கு வரவில்லையே, அதைப்பற்றிய விவரம் அறிய விரும்புகிறேன்.

1977 ஜுலை 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ், திரு. துரைமுருகன் ஆகியவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை குறித்து அமைச்சர் அவர்களிடம் கேட்டதற்கு எழுத்து மூலமாகப் பதில் வரவில்லை. வந்த பிறகு அதை எடுத்துக் கொள்கிறேன்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நானும் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருந்தேன், அதைப் பற்றியும் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினையை நாளை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. 1977–78-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதம்.

*திரு க. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இன்றைய அரசின் நிதியமைச்சர் அவர்கள் வழங்கியிருப்பதைக் குறித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக ஒரு நல்வாய்ப்பை துவக்க உரையாகப் பெற்றிருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நிதிநிலை அறிக்கை இன்றைய தினம் வெளிவந்திருக்கிற சூழ்நிலையைச் சில கோணங்களிலே நிதியமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். இன்னும் சில கோணங்களிலே அவை விளக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். மாநில மக்களுடைய உரிமைகள் பெருமளவிற்குப் பறிக்கப்பட்ட நிலையில் மாநில ஆட்சியினுடைய முதல் உரிமையின் சின்னமாகவும் இறையாண்மைத் தன்மையின் அடையாளமாகவும் இருக்கின்ற சட்டமன்றத்தின் உரிமையும் பறிக்கப்பட்ட நிலையில் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக்காலம் தமிழ்நாடு இருந்து, இன்றைய தினம் சட்டமன்றக் கூட்டம் கூடுகிற நல்ல நிலைமை பிறந்து அதன் விளைவாக தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இங்கே கூடவும், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்கான நல் வாய்ப்பும் ஏற்பட்டதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சட்டமன்றம் கலைக்கப்பட்டது சிலரால் விரும்பப்பட்டாலும் அது ஒரு வகையிலே ஜனநாயகப் படுகொலைதான் என்பதை ஜனநாயகத்திலே அக்கறையுள்ளவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். இதைவிட அகில இந்தியாவிலேயும்,